Australian Government
Department of Home Affairs

# நான் பயணிக்கும் முன் என்ன செய்ய வேண்டும்

அவுஸ்திரேலியாவுக்கு பயணிக்கும் முன்னர் நீங்கள் அவுஸ்திரேலிய பயணப் பிரகடனத்தை பூர்த்தி செய்தல் **வேண்டும்.**

## கிளம்புவதற்கு முன்னரான COVID-19 பரிசோதனை

போலிமெரேஸ் சங்கிலித் தாக்கப் (Polymerase Chain Reaction, PCR) பரிசோதனையின் மூலம் COVID-19 தொற்று இல்லையென்ற அறிக்கை அவுஸ்திரேலியாவுக்கு வருவதற்கும் அவுஸ்திரேலியாவினூடே செல்வதற்கும் கட்டாயமாகும். நீங்கள் நியூசீலாந்தில் இருந்து தனிமைப்படுத்தல் அற்ற விமானத்தில் பயணித்தாலொழிய, COVID-19 தொற்று இல்லாததை உறுதிசெய்யும் கடந்த 72 மணித்தியாலங்கள் அல்லது அதற்கு குறைந்த காலத்துக்குள் நீங்கள் பெற்றுக்கொண்ட PCR பரிசோதனை அறிக்கையை உங்கள் திட்டமிட்ட கிளம்பலுக்கு முன் உங்கள் விமான நிறுவனத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

விமான நிலையங்கள் உட்பட, அனைத்து சர்வதேச விமானங்களிலும் முகக்கவசம் அணிவது கட்டாயமாகும். கிளம்புவதற்கு முந்தைய COVID-19 பரிசோதனைக்கான தகைமைகளில் சில விதிவிலக்குகள் உண்டு. சுகாதார திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் மேலதிகத் தகவல்களைப் பார்க்கலாம்.

## ஏனைய தகைமைகள்

நீங்கள் இவற்றையும் பூர்த்தி செய்ய வேண்டி ஏற்படலாம்:

- அவுஸ்திரேலியாவுக்குள் பிரவேசிக்க செல்லுபடியாகும் வீசா
- அவுஸ்திரேலியாவின் பயணக் கட்டுப்பாடுகளுக்கான விதிவிலக்கு
- அவுஸ்திரேலியாவின் பிராந்தியங்களில் அல்லது வலயங்களில் நுழைவதற்கான அதிகாரம் ஆகியன.

பயணத்துக்காக நீங்கள் விமான நிலையத்தை அடையும் போதும் அவுஸ்திரேலியாவை அடையும் போதும் இந்தக் குறிப்பிட்ட சில ஆவணங்களை நீங்கள் விமான நிலையத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

## தனிமைப்படுத்தல்

நியூசீலாந்தில் இருந்து தனிமைப்படுத்தல் அற்ற விமானத்தில் அவுஸ்திரேலியாவுக்கு வந்தாலொழிய, அவுஸ்திரேலியாவுக்கு வருகைத்தரும் பயணிகள் (அவுஸ்திரேலியக் குடியுரிமைப் பெற்றோர் உட்பட) கட்டாயம்:

- நாட்டை வந்தடையும் நிலையத்தில் நிர்ணயித்த இடமொன்றில் 14 நாட்கள் தனிமைப்படுத்தலுக்கு உற்படுத்தப்பட வேண்டியதுடன்
- அனைத்து பிரகடனங்களையும் படிவங்களையும் பூர்த்திசெய்தலும் வேண்டும். அப்போது எம்மால் தனிமைப்படுத்தலை ஏற்பாடு செய்யவும்;
- நீங்கள் COVID-19 தொற்றுடையவராக இனங்காணப்பட்டால் உங்களை கண்காணிக்கவும் இயலும்.

மேலதிகத் தகவல்களுக்காக, சர்வதேச பயணிகளுக்கான கொரோனா வைரஸ் (COVID-19) குறித்த அறிவுரைகள் பகுதியைப் பார்க்கவும். தனிமைப்படுத்தலின் போது அதற்கான செலவை நீங்கள் ஏற்க நேரிடலாம். தனிமைப்படுத்தல் தகைமைகள் பற்றிய மேலதிகத் தகவலை அறிய, உங்களுக்கான பிராந்திய அல்லது வலய அரசாங்க சுகாதார திணைக்களத்தை அணுகுங்கள்.

## நாடு திரும்பும் அவுஸ்திரேலியர்கள்

அவுஸ்திரேலியாவுக்கு வர முயற்சித்து, ஆனால் அதற்கு இயலாமலுள்ள ஓர் அவுஸ்திரேலிய குடியுரிமை பெற்றவராகவோ நிரந்தர வதிவாளராகவோ நீங்கள் இருந்தால், நீங்கள் உங்கள் தகவல்களை வெளி விவகார மற்றும் வணிக நடவடிக்கைகள் அமைச்சுக்கு (Department of Foreign Affairs and Trade, DFAT) வழங்கி உங்கள் விபரங்களைப் பதிவுசெய்துக் கொள்ளலாம்: https://covid19.dfat.gov.au/citizeninformation/s/

DFATஆல் உங்களின் பயணத்துக்கு உத்திரவாதம் அளிக்க இயலாத போதிலும், அரசாங்கத்தால் வழங்கப்படும் வணிக விமானப் பயணங்களின் போது உங்கள் விபரங்களைக் கொண்டு உங்கள் தகைமையும் மதிப்பிடப்படும்.